பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 01 2026 SATURDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** உலகின் ஆற்றல் சக்தியாக இந்தியா உருவெடுக்க வலுவான சுயசார்பு கொள்கை அவசியமானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**2)** உஜ்வாலா திட்ட பயனாளிகளில் 80 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

**3)** வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைக்கும் வலிமை இளைஞர்களுக்கு உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

**4)** சாதிவாரி கணக்கெடுப்பை மேம்படுத்த மாநில முதலமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் உள்ளடக்கிய ஆலோசனைக்குழுவை அமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், பிரதமரை கேட்டுக்கொண்டுள்ளார்.

**5)** மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

உலகின் ஆற்றல் சக்தியாக இந்தியா உருவெடுக்க வலுவான சுயசார்பு கொள்கை அவசியமானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் தன்னிறைவையும், சுயசார்பையும் உறுதி செய்யும் என்று கூறினார்.

உள்ளூர் மொழிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்திய திரு அமித் ஷா, இளைஞர்கள் தாய்மொழியிலேயே பேசவும், கற்கவும் முன்வர வேண்டும் என்று தெரிவித்தார்.

எந்தவொரு சூழ்நிலையிலும் தாய்மொழியை விட்டுக்கொடுக்கக் கூடாது என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

உஜ்வாலா திட்ட பயனாளிகளில் 80 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் உள்ளதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் இன்று நடைபெற்ற தொழில்துறையினருக்கான கருத்தரங்கில் உரையாற்றிய அமைச்சர், பிரதமர் திரு நரேந்திர மோடி

தலைமையிலான அரசு மகளிர் தலைமையில் வளர்ச்சியை முன்னெடுத்து வருவதாக கூறினார்.

இந்த திட்டத்தின்மூலம் அனைத்து வீடுகளுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு சாத்தியமாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் மூலமும் ஏராளமான மக்கள் பயன்பெற்று வருவதாக தெரிவித்த அவர், மகளிரின் பாதுகாப்பை இது உறுதி செய்துள்ளதாகவும் கூறினார்.

இந்திய பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் செல்வதை சர்வதேச மதிப்பீடுகள் எடுத்துக் காட்டுவதாக தெரிவித்த அவர், அதிக அளவு எரிசக்தி ஆற்றலை பயன்படுத்தும் நாடாகவும் இந்தியா உருவெடுத்து வருவதாக கூறினார்.

நகரப்பகுதிகளில் மட்டுமே சமையல் எரிவாயு இணைப்பு கிடைத்து வந்த நிலையில், தற்போது கிராமப்புறங்களுக்கும் இது விரிவடைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சுமார் 80 சதவீத இணைப்புகள் கிராமப்புற வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைக்கும் வலிமை இளைஞர்களுக்கு உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் இன்று வெளியிட்டுள்ள பதிவில், வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைக்கும் நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி வழிகாட்டுதலின்பேரில் மத்திய அரசு சீரிய பணிகளை செயல்படுத்தி வருவதாக கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் தேசிய இளையோர் திருவிழாவில் கலந்துகொள்ள தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலிருந்து வந்துள்ள பல்வேறு இளைஞர்களுடன் தில்லியில் உள்ள தமது இல்லத்தில் கலந்துரையாடியதாக தெரிவித்துள்ளார்.

தமிழ் மரபு சார்ந்த கலை நிகழ்ச்சிகளுடன் அவர்களுடன் விருந்துண்டது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

வளர்ச்சி ஒன்றையே இலக்காக கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி தேசிய செயல் தலைவர் திரு நிதின் நபின் கூறியுள்ளார்.

கோவையில் இன்று தொழில் முனைவோரிடையே உரையாற்றிய அவர், தமிழகத்தில் செயல்பட்டுவரும் குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் ஒரு கோடியே 50 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

பிஜேபி ஊழல் அற்ற நடைமுறைகளை உறுதியுடன் கடைபிடித்து வருவதால்தான் சிறந்த நிர்வாகத்தை அளிப்பதாக குறிப்பிட்ட அவர், திமுக-வும், காங்கிரஸும் இணைந்து ஊழலில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டினார்.

ஊழல் அற்ற அரசை நிறுவ வேண்டும் என்ற நோக்கில் கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்தில் பெண்களுக்கு உரிய பாதுகாப்பை அளிக்க திமுக அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பெண்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் செயல்பட்டு வருவதாகவும் திரு நிதின் நபின் கூறினார்.

<<<<<>>>>>>

தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பையும் மேற்கொள்ளும் மத்திய அரசின் முடிவை வரவேற்பதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அவர் இன்று எழுதியுள்ள கடிதத்தில், சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் குறித்து விரிவாக விவாதித்து மேம்படுத்த வேண்டும் என்றும், அதற்காக மாநில முதலமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவையும் அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சாதிவாரி கணக்கெடுப்பில் விரிவான, நம்பகமான தரவுகளை பெற வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும், நலத்திட்ட உதவிகள் உரியவர்களுக்கு சென்று சேருவதற்கும் உதவும் வகையில் இந்த கணக்கெடுப்புப் பணி அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சாதிவாரி கணக்கெடுப்பு வரலாற்று சிறப்புமிக்க நடவடிக்கை என்றும், சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய

இந்தியாவின் உறுதிபாட்டை வலுப்படுத்தவும், கூட்டாட்சி கொள்கைகளை நிலைநிறுத்தவும் இந்த கணக்கெடுப்பு பயன்படும் என்று நம்புவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு எழுதியுள்ள கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் ஒரு லட்சம் பணியாளர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருவதாக மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் அரசு போக்குவரத்துக் கிளையை இன்று திறந்துவைத்து பேசிய அவர், 63 பேருக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில அமைச்சர் திரு மதிவேந்தன், ஏழை - எளிய மக்களின் மேம்பாட்டிற்காக பல திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

பெண்களுக்கான விடியல் பயணத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை போன்றவற்றின் மூலம், ஏழை எளிய குடும்பங்களை சேர்ந்த பெண்கள் பயன்பெற்று வருவதாக அவர் கூறினார்.

மலைப்பகுதிகளில் அரசு பேருந்தில் பயணம் செய்யும் பெண்களுக்கும் கட்டணமில்லா பயணம் அளிக்கப்பட்டு வருவதாகவும் திரு மதிவேந்தன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழக அரசின் சார்பில் குறள் வார விழா இம்மாதம் கொண்டாடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள மாநில அரசின் செய்திக்குறிப்பில், சேலம், திருச்சிராப்பள்ளி, தேனி, கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் இவ்விழாவையொட்டி திருக்குறள் நாட்டிய நாடகம், இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் குறள் ஓவியம் மற்றும் ஒப்பித்தல் போட்டிகள் நடத்தப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறள்வார நிகழ்வுகளுக்கான சிறப்பு காணொலியையும், அதற்கான பதாகையையும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.

<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் லேப் டெக்னிஷியன், காசநோய் ஆய்வாளர்களுக்கான தற்காலிக பணியிடங்களுக்கு வரும் 23-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் பிஜேபி சார்பில் மோடி பொங்கல் விழா இன்று நடைபெற்றது. இதையொட்டி நடைபெற்ற கோலப்போட்டியில் பங்கேற்ற மகளிருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

--------------------

பெரம்பலூரில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பாரம்பரிய முறைப்படி பொங்கல் வைத்து கொண்டாடினர்.

---------------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர்.

----------------

**கள்ளக்குறிச்சி மாவட்டம் இந்திலி கிராமத்தில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 500-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.**

**-----------------**

**திருப்பூர் மாவட்டம் பல்லடம் நகரில் காவல்துறை சார்பில், அதிநவீன கண்காணிப்பு கேமராக்களுக்கான கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது.**

**-----------**

**நாமக்கல் அரசு கலைக்கல்லூரியில் புகையில்லா போகி பண்டிகையை கொண்டாடுவது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.**

<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக, மும்பையில் நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணி 10 ரன் வித்தியாசத்தில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

முதலில் பேட் செய்த குஜராத் அணி 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 207 ரன் எடுத்தது.

பின்னர் **208** ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடிய உத்தரப்பிரதேச அணி **20** ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **197** ரன் எடுத்து தோல்வியடைந்தது.

------------------------

**19** வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில், இந்தியாவுக்கு எதிராக **375** ரன் என்ற இலக்குடன் பேட் செய்துவரும் ஸ்காட்லாந்து அணி சற்றுமுன்வரை **5** ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு **16** ரன் எடுத்துள்ளது.

முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவரில், **8** விக்கெட் இழப்பிற்கு **374** ரன் எடுத்தது.

<<<<<END>>>>>